**ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம் - 16**

**தமிழ்த்துறை**

**கலைநிறை வகுப்பு ஜூன் 2018**

## Programme Outcomes

PO1: தமிழ் மொழியின் தொன்மையான இலக்கணங்களை அறிமுகம் செய்து தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய நூல்களின் தனித்தன்மைகளையும் சிறப்புகளையும் அதிநவீன தொழில் நுட்ப முறையில் எடுத்துரைத்தல்.

PO2: சமயச் சான்றோர்களையும் அவர்களது பக்தி சிறப்பினையும் அறிந்து கொள்ளும் நோக்கில் இலக்கியங்களை அறிதல், சமய இலக்கியங்கள் சமுதாய மாற்றத்திற்குத் துணை புரிவதைத் தெளிய வைத்தல், தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பக்தி இலக்கியம் பெரும்பங்காற்றியுள்ளமையை எடுத்துரைத்தல்.

PO3: சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியங்கள் வரை அறிமுகம் செய்து, காலச் சூழலுக்கு ஏற்ப இலக்கியங்களின் வடிவம், உள்ளடக்கம் போன்றவற்றின் மாற்றங்களைக் கலந்துரையாடல் மூலம் ஆராய துணைபுரிதல்.

PO4: சமுதாயப் பயன்பாட்டை முன்வைத்து, போட்டித் தேர்வுகளுக்கான அணுகுமுறைகளைக் கருத்தில் கொண்டு மாணவிகள் பயன் பெறும் விதத்தில் நுழைவுத் தேர்வு, தகுதித்தேர்வு போன்ற தேர்வுகளில் வெற்றி பெறச் செய்தல்.

PO5: இலக்கியங்களின் திறத்தை அறிய நுணுகி, ஒப்பாய்வு செய்து மதிப்பீடு செய்யும் திறனை வளர்த்தல்.

PO6: தமிழ் இலக்கியங்களின் வாயிலாக வாழ்வியல் கூறுகளைச் சுட்டிக்காட்டி இலக்கிய இன்பத்தை நுகரச்செய்தல்.

## Programme Specific Outcomes

PSO1: இக்கால இலக்கியங்களின் தோற்றுவாயை அறிமுகம் செய்து, சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப மொழியின் வளர்ச்சி நிலையிலும் இலக்கியத்தின் வளர்ச்சியிலும் ஏற்படும் மாற்றங்களை அறியச் செய்தல்.

PSO2: காப்பியங்களின் தோற்றத்தை அறியச்செய்து, அதன் வழியாக தனி மனித ஒழுக்கத்தை மேம்படச் செய்தல், தன்னம்பிக்கையை வளர்த்தல் ஆன்மீகச் சிந்தனையைத் தூண்டுதல், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பயனை சுட்டிக்காட்டி சிறப்பான வாழ்க்கையை வாழ கற்றுக் கொள்ளுதல்.

PSO3: பாரதியார் மற்றும் பாரதிதாசனின் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, விடுதலை உணர்வு, பெண்ணுரிமைச் சிந்தனை போன்றவற்றை எடுத்துரைத்து இன்றைய இளைய தலைமுறை மாணவர்களிடையே சமுதாய விழிப்புணர்வைத் தூண்டச் செய்தல்.

PSO4: கணினித்தமிழை அறிமுகம் செய்வதோடு, அதன் பொதுப்பண்புகளை எடுத்துரைத்து

இலக்கியத்தோடு கணினியின் தனித்துவத்தையும் இன்றியமையாமையும் விளக்குதல்.

PSO5: தொல்காப்பியர் உணர்ச்சிக்குத் தரும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல் அவ்வுணர்ச்சியில் வெளிப்படும் பாவனைகள், உணர்ச்சியை உணர்த்தும் உத்திகளையும் அறியச்செய்தல்.